ආයතනයේ නම : නාගරික සංවර්ධන හා නිවාස අමාත්‍යාංශය

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

**நிறுவனத்தின் பெயர் - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் மீதான குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பாக நிலையியற் கட்டளை 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Name of the Institution: Ministry of Urban Development and Housing**

Submission of observations of the Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119 (4)

பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இலக்கம் : 79

நிறுவனம் : நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

<u>பகுதி 1:</u>

| தொடரி-லக்கம் | குழுவால் அடையாளம் காணப்படுள்ள குறைப்பாடுகள் | செவ்வையாக்குவதற்கு அமைச்சினால் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்கால நிலைமை |
|---|---|---|
| 01. | பொருட் பதிவேட்டு ஆவணம் இற்றைப்படுத்தி பராமரிக்கப்படவில்லை. | பிரதான பொருட் பதிவேட்டு ஆவணம் மற்றும் துறைசார் பொருட் பதிவேட்டு ஆவணம் இற்றைப்படுத்தி பராமரிக்கப்படுகின்றது. |
| 02. | இடர் பதிவேடு இற்றைப்படுத்தி பராமரிக்கப்படவில்லை. | இடர் பதிவேடு இற்றைப்படுத்தி பராமரிக்கப்படுகிறது. |
| 03. | கணக்காய்வாளர் அதிபதி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு ஐயப்பாடுகளுக்கும் ஒரு மாத காலப்பகுதிக்குள் பதில் வழங்கப்படவில்லை. | இது தொடர்பில் ஒரு மாத காலப்பகுதிக்குள் கணக்காய்வுக்கான பதில்களை அனுப்புவதற்காக பின்வரும் நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.<br><br>அதன்படி, கணக்காய்வாளர் அதிபதியின் அவதானிப்புகளுக்கான பிரிவுகளையும் அலுவலர்களையும் அடையாளம் காணப்பட்டு ஒரு வார காலப்பகுதிக்குள் சம்பந்தப்பட்ட பிரிவுகளிடம் சமர்ப்பித்தல்.<br><br>2-3 வாரங்களுள் கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பில் பதில்களை பெற்றுக்கொள்வதற்காக, உரிய அலுவலர்களுடனும் பிரிவுகளுடனும் தொடர்புகொண்டு பணிகளை மேற்கொள்ளுதல்.<br><br>4 ஆவது வாரத்தில் வழங்கிய தெளிவுபடுத்தல் மற்றும் அபிப்பிராயங்களை உரிய அவதானிப்புகளுடன் ஒப்பிடப்பட்டு வேறுபாடுகள் காணப்படின் மீண்டும் பதில்களைப் பெற்றுக்கொண்டு இறுதி பதில்களை செயலாளரது ஒப்பத்துக்கு சமர்ப்பித்தல்<br><br>இந்த நிகழ்ச்சித்திட்டம் சில கணக்காய்வு அவதானிப்புகளுடன் ஒப்பிடுவதற்கு சிரமங்கள் உள்ளது என்பதை மேலும் சுட்டிக்காட்டுகின்றேன். எவ்வாறாயினும் அனைத்து கணக்காய்வு ஐயப்பாடுகளுக்கும் ஒரு மாத காப்பகுதிக்கள் பதில் வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| 04. | உள்ளக கணக்காய்வு ஐயப்பாடுகள் பொருட்டு ஒரு மாத காலப்பகுதிக்குள் பதில் அளிக்கப்படாத சந்தர்ப்பங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன. | துறைகளுக்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்படும் உள்ளக கணக்காய்வு ஐயப்பாடுகள் பொருட்டு 01 மாத காலப் பகுதிக்குள் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறித்த |

| | | |
|---|---|---|
| | | தொடர்பில் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு காணப்படும் குறைப்பாடுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 05. | நிதி ஒ.விதி 134(2) இன் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி வினவிய பின்னர், உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சி திட்டம் ஆண்டு ஆரம்பத்தில் தயாரிக்கப்படவில்லை. | ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு முதலாவது கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. |
| 06. | அனைத்து வாகனங்களினதும் உரிமை உறுதிப்படுத்தப்படும் கடிதங்கள் உடமையில் காணப்படாமை | அமைச்சுக்கு சொந்தமான அனைத்து வாகனங்களின் உரிமையையும் சரிபார்க்கும் போது, பின்வரும் வகையான வாகனங்கள் காணப்படுவதை அவதானிக்க முடிந்தது.<br>1. அமைச்சின் பெயரில் காணப்படும் வாகனங்கள்<br>2. பதிவுச் சான்றிதழில் உரிமையாளரின் பெயராக தற்போதைய அமைச்சின் பெயரைக் கொண்டிருக்காத, அமைச்சிற்கு சொந்தமான வாகனங்கள்<br>3. அமைச்சுக்கு உரியதற்ற பிற நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள்<br>அதன்படி, வாகனங்களின் உரிமையை மீண்டும் பரிசீலனை செய்து,<br>1. அமைச்சுக்கு சொந்தமான போதும், தற்கால அமைச்சின் பெயரில், உரிமையாளரது பெயராக தற்கால அமைச்சின் பெயரை திருத்தம் செய்வதற்கும்,<br>2. அமைச்சுக்குச் சொந்தமில்லாத வெளி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களை கையகப்படுத்துவதற்கும்,<br>துரிதமான பணிகளை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 07. | அனைத்து வாகனங்களும் அரசு இலச்சினைகளை வரயப்படவில்லை. | அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களில் அரச இலச்சினை வர்ணம் பூசுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 08. | வாகனமொன்று பாவனைக்குதவாத வகையில் காணப்படும்போது, 8 மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை. | 2022-ம் ஆண்டுக்குள் இதுபோன்ற கான்செப்ட் வாகனங்கள் இருக்காது. |
| 09. | ஒவ்வொரு வாகனத்திற்கும் பதிவு புத்தகங்கள் இற்றைப்படுத்திய அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை. | வாகன பதிவு புத்தகங்களை புதுப்பிக்க, பாட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, பதிவு புத்தகங்களை புதுப்பித்த நிலையில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. |
| 10. | அரசாங்க வாகனங்களின் விபத்துகள் தொடர்பில் நி.ஒ.விதி பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை. | விபத்துக்கள் தொடர்பில் நிதி.ஒழு.விதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்கின்ற போதும், சில வெளிக் காரணங்களால் குறித்த பணிகள் தாமதமடைந்துள்ளமை அவதானிக்கப்படுகிறது. ஆகையால் உரிய வகையில் விபத்துகள் தொடர்பில் பணிகளை மேற்கொள்வதற்கும், அவ்வாறு செயலாற்றுவதற்கு சிரமமாக இருக்கும் போது, அது தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று எதிர் காலத்தில் விபத்துகள் தொடர்பில் தாமதமின்றி செயல்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 11. | நிதி.ஒழு.விதி 94(1) பிரகாரம் செலவு விடயத்திற்கு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திய பின்னர், ஆண்டு இறுதியில் மீதமுள்ள ஒதுக்கீட்டின் வரம்பை மீறும் வகையில் பொறுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஆண்டுக்குள் செயற்படுத்திய திட்டம் பொருட்டு, குறித்த ஆண்டில் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுள் மட்டுமே பொறுப்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஏதேனும் திட்டம் பல ஆண்டுகளாக செயற்படுமாயின், குறித்த மொத்த திட்டத்தின் செலவுகளின் பொருட்டு பொறுப்புகளுக்கான முற்பணம், தேவைக்கமைவாக ஆண்டுதோறும் ஏற்பாடு செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 12. | ஒரு ஆண்டுக்கும் மேலாக காணப்பட்ட கடன் நிலுவைகள் இருந்தன. | 2011.06.29 முதல் பணிதடை செய்யப்பட்ட திருமதி டி.எல்.என்.எஸ்.கே. ஜயசிங்கவின் இடர் கடன் 2022.12.31 ஆம் திகதி நிலுவை ரூபா. 116,689.75 காணப்பட்டதுடன், தவணைகளில் செலுத்திய பின்னர், தற்போது கடன் நிலுவை ரூபா.114,689.75 ஆகும். இந்த அலுவலர் தொடர்பில் அவருக்கு தொடரப்பட்ட வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், அவர் 2024.08.01 ஆம் திகதியிலிருந்து மீள சேவையில் அமர்த்தப்பட்டுள்ளது. அதன்படி, நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| | | பதவி வெறித்தாக்கிய திரு. எம்.எல்.எம். அன்சர் அவர்களின் 2022.12.31 ஆம் திகதியில் நிலுவை ரூபா. 33,050.00 ஆனதுடன், 2024.04.26 அன்று கடன் நிலுவை செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. |
| 13. | நி.ஒ.விதி 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட நிமித்த கட்டுநிதிகளுக்கான பணிகள் முடிவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்வு காணப்படவில்லை. | விசேட பணிகளுக்காக வழங்கப்படும் கட்டுநிதிகள் உரிய பணிகள் முடிவடைந்தவுடன், குறித்த முற்பணம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 14. | அனுமதிக்கப்பட்ட பதவியணி வரம்பை மீறி பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. | அனுமதிக்கப்பட்ட வரம்பை மீறி வேறு பணியாளர்கள் நியமனம் செய்யப்படவில்லை. |

<u>பகுதி 2</u>

| தொடரி லக்கம் | குழுவால் அடையாளம் காணப்பட்டுள்ள குறைப்பாடுகள் | செவ்வையாக்குவதற்கு அமைச்சினால் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்கால நிலைமை |
|---|---|---|
| 01. | நிறுவனத்தால் பராமரிக்கப்படும் இணையதளம் மூலம், பொதுமக்களின் முறைப்பாடுகளையோ அல்லது பாராட்டுக்களையோ குறிப்பிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. | அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளம் றறற. அழரனா.பழள.டம நாளாந்தம் இற்றைப்படுத்துவதுடன், கருத்துகள், பிரேரணைகள் மற்றும் குற்றச்சாட்டுகளை சமர்ப்பிக்க இணையதளத்தில் ஓர் இணைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. |
| 02. | 2018.01.24 ஆம் திகதிய 05∴2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தம் செய்யப்பட்ட 2008.02.06 ஆம் திகதிய 05∴2008 ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் பிரசைகளின் சாசனம்∴ சேவை பெறுநர்களின் பட்டயம் உரிய வகையில் தயாரிக்கப்படவில்லை. | அப்போது காணப்பட்ட ஒவ்வொரு துறையிலிருந்தும் தகவல்களைச் சேகரித்து பிரசைகள் சாசனம் தயாரிக்கப்படினும், அவ்வப்போது அமைச்சுக்களில் ஏற்பட்ட மாற்றங்களால் குறித்த பிரசைகள் சாசனம் பகிரங்கப்படுத்தப்படவில்லை. தற்போது பிரசைகள் சாசனம் தயாரிக்கப்பட்டு அமைச்சின் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. |
| 03. | பிரசைகளின் சாசனம்∴ சேவை பெறுநர்களின் பட்டயம் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதிப்பீடு செய்வதற்கு முறைமை தயாரிக்கப்படவில்லை. | தற்போது வெளியிடப்பட்டுள்ள பிரசைகள் சாசனத்தில், மேற்பார்வை செய்வதற்கும், மதிப்பிடுவதற்கும் முறைமைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| 04. | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02∴2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி, உரிய வகையில் மனித வள திட்டம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 05. | தயாரிக்கப்பட்ட மனிதவள திட்டம் மூலம் பதவியணியில் 50மூ இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையினர் பொருட்டு ஓராண்டுக்கு குறைந்தது 12 மணிநேர பயிற்சி வாய்புகளை வழங்கப்படவில்லை. | 50மூ இற்கும் அதிகமானவர்களுக்கு குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. |
| 06. | ஒட்டுமொத்த பதவியணி அடங்கலாக செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவில்லை. | இந்த காலகட்டம் தொடர்பாக, நகர்ப்புற அபிவிருத்தி, கழிவு அகற்றல் மற்றும் சமூக தூய்மை நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சு என்ற வகையில் செயற்பட்டதுடன், குறித்த இராஜாங்க அமைச்சின் அனைத்து பதவியணிக்கும் செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| 07. | மனித வள அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட அலுவலர் ஒருவரை நியமிக்கப்படவில்லை. | மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கும், ஆற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி எம்.ஏ. ரணவக்க பெயரிடப்பட்டுள்ளது. |
| 08. | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50மூ இற்கும் குறைவாகவே காணப்பட்டது. | அப்போது நாட்டில் நிலவிய நெருக்கடி நிலை மற்றும் செலவுக் கட்டுப்பாடு தொடர்பான அறிவுறுத்தல்கள் காரணமாக மனித வள அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடங்கிய பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை. |
| 09. | நிறுவனத்தின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம், கீழ்நிலை அபிப்பிராயம்∴ மறுப்பு நிலை ∴ பாதகமான நிலை காணப்பட்டது. | கணக்குகள் தொடர்பாக துணை அபிப்பிராயம் கணக்காய்வாளர் அதிபதியால் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, அதற்கு ஏதுவான விடயங்களைக் கவனத்தில் கொண்டு சரி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| 10. | அனைத்து அலுவலர்களதும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான கூற்றுகளை சமர்ப்பிக்கப்படவில்லை. | அனைத்து அலுவலர்களுக்கும் எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023.05.31 ஆம் திகதியில் 2023 ஆம் ஆண்டுக்குரிய 16 சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. |

**அனுர கருணாதிலக (பா.உ.)**

அமைச்சர்

நகர அபிவிருத்தி, நிரமானதுறை, வீடமைப்பு அமைச்சு

අනුර කරුණාතිලක

නාගරික සංවර්ධන, ඉදිකිරීම් සහ නිවාස අමාත්‍ය